31st January 1963]

Temple Funds

* 30-*A* *Q*.—Sri K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

Whether the Government have any proposal to divert the funds of Temples for the plan programmes and for Social Welfare Schemes?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : No. The funds can be appropriated only for the religious and charitable purposes mentioned in section 66 (i) of the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1959, and the Government have no proposal to amend this section.

திரு. கே. ஏ. மதியழகன் : தமிழ் நாட்டுக் கோயில்களுடைய மொத்த நில புலன்கள், சொத்துக்களின் மதிப்பிடு எவ்வளவு என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனியாகக் கேள்வி போட்டால், விவரங்களைத் தொகுத்துக் கொடுக்க முடியும்.

திரு. கே. ஏ. மதியழகன் : அறிவே கடவுள், அன்பே தெய்வம் என்று சொல்லப்படுகின்ற தமிழகத்திலே, இப்படிப்பட்ட பெரும் செல்வங்களை திட்ட காரியங்களுக்காகப் பயன்படுத்துவது சரியானதல்ல என்பது அரசாங்கத்தின் கருத்தா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அப்படி ஒன்றும் அரசாங்கம் கருதவில்லை. இந்த தர்ம ஸ்தாபனங்களின் இலட்சியங்களுக்கு ஏற்ற வகையில் கோயில் நிதிகளிலிருந்து செலவு செய்யப்பட்டு வருகின்றன.

திரு. வை. சங்கரன் : ஆலயங்களுக்காக சொத்துக்களை அர்ப்பணித்து இருப்பவர்களின் நோக்கம் அந்த சொத்துக்கள் தெய்வ வழிபாட்டுக்காக செலவழிக்கப்படவேண்டு மென்பதே. வேறு வகையில் அதை செலவழிப்பதற்கு சட்டத்திலே இடமில்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த இலட்சியங்களை யெல்லாம் மனதில் வைத்துக்கொண்டுதான் இந்த மன்றம் சட்டம் இயற்றியிருக்கிறது. அந்தச் சட்டத்தின்படிதான் செலவழிக்கப் படும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : தேசிய நெருக்கடியை உத்தேசித்து, கோயில்களிலே இருக்கிற தங்கத்தையெல்லாம்கூட இப்பொழுது அரசாங்கத்திற்கு கொடுக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது நடமாடும் தெய்வங்கள் வறுமையிலிருந்து வாடுவதைத் தவிர்ப்பதற்காக கோயில்களிலே இருக்கிற அதிகப்படியான சொத்துக்களை பயன்படுத்துவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கோயில்களால் பயன் அடைகிறவர்கள் நடமாடும் தெய்வங்கள்தான். கோயில்களிலே இருக்கிற தெய்வங்கள் அல்ல. (சிரிப்பு).

[31st January 1963

திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்பொழுது தேசிய பாது காப்புக்காக கோயில்களின் நிதியிலிருந்து ஏதாவது நிதி அளிக்கப் பட்டிருக்கிறதா ? அப்படி அளிக்கப்பட்டிருந்தால், எவ்வளவு ? இன்னும் பாதுகாப்பு நிதிக்கு அளிப்பதற்கு ஏதாவது முயற்சிகள் எடுக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : என்னிடம் முழு விவரங்கள் இல்லை. தேசிய பாதுகாப்பு நிதிக்கென்று சிற்சில தேவஸ்தானங் கள் ஓரளவு தொகை அளித்திருக்கின்றன. பெரும்பாலும் அவர்கள் தேசிய பாதுகாப்புப் பத்திரங்களில் பணம் போட்டிருக் கிறார்கள். மேலும் உபயோகமில்லாத தங்கத்தை தங்கப் பத்திரங் களிலே போட்டிருக்கிறார்கள்.

திரு. எம். தண்டாயுதபாணி : இப்பொழுது வட்டார விஸ்தரிப்பு வேலைகளுக்கு கிராமப் பங்குத் தொகை 25 சத விகிதம் கொடுக்க வேண்டியிருக்கிறது. பூரா கிராமமும் ஆலயத்திற்கு சொந்தமாக இருக்கின்ற பகுதிகளிலாவது, கோயில் நிதியிலிருந்து 25 சத விகிதம் கொடுப்பதற்கு அரசாங்கம் வழிவகை செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சட்டத்தின்படி எந்தெந்த செலவினங்கள் அனுமதிக்கப்படமுடியுமோ அதன்படி அனுமதிக் கப்படும்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாமென்று நமது நாட்டிலே ஒரு பழமொழி நிலவி வருகிறது. ஆகவே, இந்த நிதியைப் பயன் படுத்தி எங்கே கோயில்கள் இல்லையோ அங்கெல்லாம் கோயில்கள் கட்டுவதற்கு சர்க்கார் முயற்சி எடுப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : புதிதாக கோயில்கள் கட்டு வதற்கு உத்தேசமில்லை. அதற்குச் சட்டமும் இடம் கொடுக்காது என்று நான் நினைக்கிறேன். மேலும், கோயில் இல்லாத ஊரே இல்லை என்று சொல்லலாம்.

அமைச்சர் சுற்றுப்பயணம்

** 30-பி. கேள்வி.—திரு. நா. ப. செங்கோட்டுவேலு :* கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தமிழக அமைச்சர்கள் 1—8—1962 முதல் 14—8—1962 முடிய ஒவ்வொருவரும் பெற்ற பிரயாணப்படி எவ்வளவு ?

(இ) அதன் விபரமடங்கிய பட்டியல் மேஜை மீது வைக்கப் படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) A statement [a] is laid on the table of the House.

திரு. நா. ப. செங்கோட்டுவேலு : இந்தப் பிரயாணப்படி திருச் செங்கோடு இடைத்தேர்தல் நடந்த சமயத்தில் வாங்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

---

[a] Printed as Appendix I on page 297.